**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கராபுரம்**

**முன்னிலை:- திரு.சி.ப. முல்லைவாணன். B.A.,B.L.,(Hons)**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சங்கராபுரம்.

2024-ம் ஆண்டு ஜீலை திங்கள் 12-ஆம் நாள் வெள்ளிக்கிழமை

இ.ம.எண்.588/2015 இல் அசல் வழக்கு எண் 199/2014

**CNR.NO:TNVP16-000203-2014**

1) முருகன்

2) சித்ரா

3) சாந்தி

4) கிளியம்மாள்

5) இளவர், ராஜசேகர்

( 5 ம் மனுதாரர் ராஜசேகருக்கு பாதுகாவலராக 4 ம் மனுதாரர் கிளியம்மாள்)

..மனுதாரர்/வாதி

..எதிர்..

1) தலைமை ஆசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி, பொருவளூர் கிராமம்

2) மாவட்ட கல்வி அலுவலர், விழுப்புரம் கோட்டம்

3) தலைமை ஆசிரியர், ஊராட்சி துவக்கப்பள்ளி , பொருவளூர் கிராமம்

4) மாவட்ட தொடக்கக்கல்வி அலுவலர், விழுப்புரம்

5) மாவட்ட முதன்மை கல்வி அலுவலர், விழுப்புரம்

6) வருவாய் வட்டாட்சியர், சங்கராபுரம் வட்டம்

7) மாவட்ட ஆட்சித்தலைவர், கள்ளக்குறிச்சி மாவட்டம்

8) இயக்குநர், பள்ளி கல்வி இயக்குநரகம்

9) உதவிபொறியாளர் , பொதுப்பணிதுறை (கட்டிடம் ) கள்ளக்குறிச்சி

10) குடிநீர் வடிகால் வாரியம், விழுப்புரம்

11) ஆணையாளர், சங்கராபுரம் ஊராட்சி ஒன்றியம்

..எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஆர்.ஜெ.செல்வநாயகம், அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 11 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.பி.அண்ணாமலை அவர்கள் ஆஜராகியும் எதிருரை தாக்கல் செய்யாததால் 1 முதல் 11 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் எதிராக கடந்த 18.08.2015 அன்று ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய பரிசீலைனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

1) மனுதாரர்கள்/வாதிகள் தங்களது பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள காரணங்களை முன்னிட்டு நீதிமன்ற வழக்கறிஞர் ஆணையர் நியமனம் செய்து நில அளவையர் உதவியுடன் மனு சொத்தை பார்வையிட்டு அளவீடு செய்து ஒரு வரைபடம் மற்றும் அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவு பிறப்பிக்கவேண்டுமாய் மனுதாரர்கள்/வாதிகள் உவிமுச கட்டளை 26 விதி 9 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுதாரர்கள்/ வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:-**

மனுதாரர்கள் எதிர்மனுதாரர்கள் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அவ்வழக்கு வாதிகளுக்கு எதிராக கள்ளக்குறிச்சி இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் கடந்த 13.03.2007 அன்று தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு அதனை எதிர்த்து வாதிகள் கள்ளக்குறிச்சி சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு மே.வ.எண்.40/2007 என தாக்கல் செய்யப்பட்டு கடந்த 19.11.2013 ல் கூடுதல் எழுவினாக்கள் வனையப்பட்டு மீண்டும் விசாரணை நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அனுப்பப்பட்டது மேற்படி மேல்முறையீட்டு தீர்ப்புரையில் 3 வது எழுவினாவாக தாவா புல எண்.149/2 ல் குந்தியம்மாள் 1.39 ஏக்கர் கிரையம் கொடுத்துவிட்டார் என்பதும் அதில்தான் அரசு கட்டிடங்கள் உள்ளது என்பது உண்மையா என வனையப்பட்டுள்ளது. மேற்படி எழுவினாவிற்கு நிரூபணம் செய்ய தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர் நில அளவையர் உதவியுடன் அளவீடு செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்தால் மட்டுமே உரிய தீர்வு காண முடியும். எனவே நீதிமன்ற வழக்கறிஞர் ஆணையர் நியமனம் செய்து

மனு சொத்தை அளவீடு செய்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது. எனவே மனு சொத்தை நிலஅளவையர் உதவியுடன் நீதிமன்ற வழக்கறிஞர் ஆணையர் நியமனம் செய்ய உத்தரவிட வேண்டி மனுதாரர் மனு தாக்கல் செய்துள்ளார்.

3) 1 முதல் 11 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.பி.அண்ணாமலை அவர்கள் ஆஜராகியும் எதிருரை தாக்கல் செய்யாததால் 1 முதல் 11 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் எதிராக கடந்த 18.08.2015 அன்று ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

4) இருதரப்பிலும் சாட்சிகள் விசாரணை செய்யப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. இம்மனுவில் மனுதாரர்கள் தரப்பில் வாதுரைக்காக பல வாய்ப்புக்கள் வழங்கப்பட்டும் மனுதாரர் தரப்பில் வாதுரை சமர்பிக்காததால் மனுதாரர்கள் தரப்பு வாதுரை முடிக்கப்பட்டது. வழக்காவணங்கள் பரிசீலைனை செய்யப்ட்டது.

5) தற்போது எழும்வினா இம்மனு அனுமதிக்கத்தக்கதா? அல்லது இல்லையா? என்பதேயாகும்?

6) தாவா வழக்கானது விளம்புகை மற்றம் சுவாதீன மீட்டெடுப்பு மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது.

7) வழக்கு கோப்பினை பரிசீலனை செய்ததன் அடிப்படையில் மனு பி அட்டவணை சொத்தில் எதிர்மனுதாரர்கள் ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டியுள்ளார்கள் என்றும் அதனை நிரூபணம் செய்ய நீதிமன்ற வழக்கறிஞர் ஆணையர் நியமனம் செய்ய உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தாக்கல் செய்த தாவா வழக்கானது செயலுறுத்துக்கட்டளை மற்றும் சுவாதீன மீட்டெடுப்பு பரிகாரம் கோரியுள்ள நிலையில் அது தொடர்பாக மனு பி அட்டவணை சொத்தில் எவ்வளவு விஸ்தீரணத்தில் கட்டிடங்கள் அமைக்கப்பட்டுள்ளது என்பதை நீதிமன்ற வழக்கறிஞர் ஆணையர் மூலம் மட்டுமே அறிய முடியும். மேலும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவிற்கு எவ்வித ஆட்சேபனையும் செய்யாத நிலையில் மனு சொத்துக்களை அளவீடு செய்ய எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித ஆட்சேபனையும் கிடையாது என இந்நீதிமன்றம் கருதுகிறது-

8) எனவே மேற்படி மனு பி அட்டவணை சொத்தில் அமைக்கப்பட்டுள்ள கட்டிடங்கள் தொடர்பாக அளவீடு செய்ய வேண்டியது இன்றியமையாததாகும். ஆகவே

தாவா இருதரப்பினரின் பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காணும் பொருட்டு மனு சொத்துக்களை அளவீடு செய்து அறிக்கை தாக்கல் செய்வது அவசியமான ஒன்றாகும். மேலும் மனு சொத்தில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள விபரமானது நீதிமன்ற வழக்கறிஞர் ஆணையர் அறிக்கை மூலம் மட்டுமே நீதிமன்ற பார்வைக்கு கொண்டு வர முடியும் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

9) இறுதியாக நீதியின் நலன் பொருட்டு மேற்படி மனு சொத்துக்களான மனுவில் குறிப்பிட்டுள்ள சொத்துக்களை வட்ட நில அளவையர் உதவியுடன் அளவீடு செய்ய வழக்கறிஞர் ஆணையர் அமைக்கவேண்டியது அவசியமான ஒன்றாகும். மேலும், மேற்படி ஆணையர் அமைப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. ஆகவே மனு சொத்துக்களை வட்ட நில அளவையர் உதவியுடன் பூருப அமைப்பை பார்வையிட்டு நீதிமன்ற வழக்கறிஞர் ஆணையர் அறிக்கை மற்றும் அளவீடுகளுடன் கூடிய புலவரைபடத்துடன் மாதிரி வரைபடம் தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையராக வழக்கறிஞர் திரு.என்.ராமசாமி, அவர்கள் நியமிக்கப்படுகிறார். நீதிமன்ற வழக்கறிஞர் ஆணையருக்கு மதிப்பூதியம் ரூ.10,000/-யை மனுதாரர் செலுத்த வேண்டும். மேற்படி நீதிமன்ற வழக்கறிஞர் ஆணையர் மதிப்பூதியத்தை வரும் 02.08.2024 தேதிக்குள் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யவேண்டும், அதன் பிறகு நீதிமன்ற வழக்கறிஞர் ஆணையர் இருதரப்பிற்கும் உரிய அறிவிப்பு வழங்கி மனு சொத்தை வட்ட நில அளவையர் உதவியுடன் புல வரைபடத்துடன் ஒப்பீடு செய்து பூருப அமைப்பை பார்வையிட்டு நீதிமன்ற வழக்கறிஞர் ஆணையர் அறிக்கை மற்றும் அளவீடுகளுடன் கூடிய புலவரைபடத்துடன் மாதிரி வரைபடம் வரும் 30.08.2024 தேதிக்குள் தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது. அழைக்க வாய்தா 30.08.2024.

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, மீண்டும் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2024 ம் ஆண்டு, ஜீலை திங்கள், 12-ம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/-C.P.Mullai Vanan, B.A.,B.L., (Hons)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
சங்கராபுரம்.

I) இருதரப்பிலும் சாட்சிகள் ..இல்லை

II) இருதரப்பிலும் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் ...இல்லை

Sd/-C.P.Mullai Vanan, B.A.,B.L., (Hons)

மாவட்ட உரிமையியல் நீதிபதி

சங்கராபுரம்.